நிலக்கடலை பயிரிட மானியம்

*141 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கடலை பயிரிட அரசு மானியத்தொகை ஏதேனும் வழங்கிவருகிறதா ?

(இ) நமது மாநிலத்தில் எத்தனை ஏக்கரில் நிலக்கடலை பயிரிடப்பட்டு வருகிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) 9,42,000 ஹெக்டர். ஒரு ஹெக்டருக்கு இரண்டரை ஏக்கர்.

Supply of groundnut oil in Northern States

*142 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether a large quantity of groundnut oil is being sent to North Indian States from this State for the Vanaspathy Industries; and

(b) if so, the details thereof for the calendar years 1971 and 1972?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) 1971-ல் 4,76,099 குவிண்டால், 1972-ல் 4,70,341 குவிண்டால்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இங்கு கடலை எண்ணெய் எக்கச்சக்கமான விலையில் விற்கும்போது வட மாநிலங்களுக்கு லட்சக்கணக்கான க்விண்டால் அளவிற்கு விற்கிறீர்களே, காரணம் என்ன ? மத்திய அரசு அப்படி விற்கச் சொன்னாலும் மாநில அரசு தேவை இவ்வளவு இருக்கிறது என்று எடுத்துச்சொல்லி வேண்டிய தடை விதிக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வேர்கடலை, வேர்கடலை எண்ணெய் உபரியாக இருக்கிறது. நம் தேவை போக மீதி இருப்பதுதான் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது.